# கர்த்தரால் போதிக்கப்பட்ட பிள்ளைகள்

## ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா?

டிசம்பர் மாதம் வந்திருச்சு அரைப்பரீட்சை எப்பொழுது முடியும்? கிறிஸ்மஸை சந்தோஷமா ஜாலியா கொண்டாடணும் தானே நினைச்சுட்டு இருக்கீங்க. பெஸ்ட்டா எக்ஸாம் எழுதி நல்லா கிறிஸ்மஸைக் கொண்டாடுங்கள். இயேசப்பாவும் கூட சின்ன பிள்ளையாக இருக்கும்போது பஸ்கானு ஒரு பண்டிகையை கொண்டாட வருஷா வருஷம் அவங்க அம்மா அப்பா உறவினர்களோடு எருசலேமில் உள்ள தேவால யத்திற்கு போவாங்க. உலக முழுவதும் உள்ள யூதமக்கள் இந்த பண்டிகையை கொண்டாட அங்கே வருவாங்க. இப்படி ஒரு முறை இயேசப்பாவின் குடும்பத்தார் எருசலேமுக்கு போனாங்க. பண்டிகை முடிந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது இயேசப்பாவை காணவில்லை. அம்மா மரியாள் இயேசு இயேசுன்னு சத்தம் போட்டு கூப்பிட்டுக் கொண்டே தேடிப் பார்த்தாங்க. அவங்க அப்பா யோசேப்பு கிட்டேயும் சொல்லி எல்லாரும் சேர்ந்து எங்கே தேடினாலும் இயேசுவை காணோம். அந்த காலத்தில் நடந்தே தான் ஊருக்கெல்லாம் போவாங்க. அப்படி அவங்க சொந்தக்காரங்களோடு இயேசப்பா இருக்காங்கன்னு தேடிப் பார்த்தால் அங்கேயும் காணோம் தெரிஞ்சவங்க கிட்ட கேட்டுப் பார்த்தாலும் இயேசப்பா இல்லாததால் ஐயோ பிள்ளையை தொலைச்சிட்டேனு வழியெல்லாம் தேடி, கடைசியா எருசலேம் தேவாலயத்துக்கு வந்துட்டாங்க.3 நாளைக்குப்பின் போதகர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிற இடத்தில் ஒரு சின்ன பையன் உட்கார்ந்து பேசுகிறதை பார்த்து அங்கே ஓடி சென்று பார்த்தாங்க என்ன ஆச்சரியம் அது இயேசு தான். போதகர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இந்த சின்ன பையன் எவ்வளவு அறிவா பதில் சொல்லுகிறான். அவங்கள கேள்வி கேட்கிற அளவுக்கு இவனுக்கு வசனம் எல்லாம் தெரியுதேனு எல்லாரும் ஆச்சரியப்பட்டு பேசிக் கொண்டிருந்தாங். இதை எல்லாம் கேட்டா அவங்க அம்மா ஏன் மகனே இப்படி செய்தாய் உன்னை நாங்கள் எங்கெல்லாம் தேடினோம் தெரியமா. ரொம்பவே எங்களுக்கு கவலையாய் இருந்துச்சுன்னு சொன்னாங்க. அதுக்கு இயேசு என்ன சொன்னார் தெரியுமா? ஏன் என்னை தேடினீங்க என் பிதாவுக்கான காரியங்களை நான் பேச வேண்டும், செய்ய வேண்டும் என்று உங்களுக்கு தெரியுமே என்றார். அதற்கு அப்புறம் அவங்க எல்லாரும் சேர்ந்து நாசரேத்துக்கு போனாங்க. அங்கே இயேசப்பா அவங்களுக்கு கீழ்ப்படிந்திருந்து. தேவ கிருபையிலும், மனிதர் தயவிலும் வளர்ந்து வந்தார். இயேசு நம்மை போல மனிதன் இல்லை, அவர் கடவுள் நமக்காக மனிதனாக பிறந்த தெய்வம். அவருக்கு உருவம் இல்லை, வார்த்தையாக இருக்கிறார். இயேசுவை தான் அம்மா, அப்பா பைபிள்ல படிச்சு நமக்கு சொல்லித் தாராங்க. இயேசுவுக்கும் அப்படித்தான் காலையி லேயே எழுந்திருக்கும் போதும், படுக்கும் போதும், வீட்ல உட்கார்ந்து இருக்கும் போதும், வழியில் நடக்கிற போதும் சொல்லிக் கொடுத்தாங்க. அதனால இயேசு வசனத்தின்படி வாழ்ந்தார் நமக்கும் உதவி செய்கிறார். தம்பி, தங்கையே இயேசுவை மாதிரி வேதத்தை படித்து, அவர் பிள்ளையாய் இருப்பாயா? உபாகமம் 4:9,10

OK ALL THE BEST HAPPY CHRISTMAS.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா செல்போனை பார்க்கிறது, விளையாடுகிறது என்று நேரத்தை எல்லாம் வேஸ்ட் பண்ணிட்டு, அம்மா வசனம் சொல்லித் தந்தப்ப வெறுப்புல அதை படிக்காமல், புரிஞ்சுக்காம இருந்துட்டேன். என்னை மன்னிச்சிருங்க, இனிமே உங்கள மாதிரியே நானும் வேதத்தை கற்றுக் கொள்ள, அதன்படி நடக்க உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.



## மனப்பாட வசனம்

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமு மாயிருக்கிறது. சங்கீதம் 119:105

